**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8082865

1. District மாவட்டம்: அரியலூர் PS காவல்நிலையம்: ஊ.த.க. பி Year ஆண்டு: 2024 FIR No. மு.த.அ. எண்: 01/2024 Date நாள்: 01.03.2024

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Act-1988 (as amended Sections பிரிவுகள்: 12
(iii) Act சட்டம்: in 2018) Sections பிரிவுகள்: —
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 29.2.2024 Date to : நாள் வரை
Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : 11.00 மணி Time to நேரம் வரை : 11.30 மணி
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.03.2024 Time நேரம் : 09.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் : 09.00 hrs.

4. Type of Information : Written/ ~~Oral~~ : ✓
தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 50 கிமீ வடகிழக்கு ஆண்டிமடம்.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. ஆரோக்கியநாதன்
(b) Father's/ ~~Husband's~~ Name தந்தை / ~~கணவர்~~ பெயர் : அருளப்பன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1962
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் : அரசு ஊழியர் (ஓய்வு)
(g) Address : முகவரி புனித அந்தோணியார் கோவில் வீதி, அரியாங்குப்பம், புதுச்சேரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திருமதி. மாரியம்மா VAO, ஆண்டிமடம் கிராம நிர்வாக அலுவலர், ஆண்டிமடம் தாலுகா, அரியலூர் மாவட்டம்
2) அருள் (VAO மாரியம்மா கணவர்)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது**

01.03.2024-ம்தேதி காலை 08.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் அலுவலகத்தில் இருந்தபோது புதுச்சேரி, அரியாங்குப்பம், தூய அந்தோணியார் கோவில் வீதி, கதவு எண்.14 என்ற முகவரியில் வசிக்கும் அருளப்பன் மகன் திரு.A.ஆரோக்கியநாதன் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர், A.ஆரோக்கியநாதன், (வயது-62) த/பெ அருளப்பன், எண்.14, தூய அந்தோணியார் கோவில் வீதி, அரியாங்குப்பம், புதுச்சேரி. செல் நம்பர்: 9442236947, பெறுநர், உயர்திரு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அரியலூர். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் புதுச்சேரியில் உள்ள பாரதியார் பல்கலைக்கூடத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து கடந்த ஆகஸ்ட் 2022-ல் ஓய்வு பெற்றுவிட்டேன். எனது மனைவி சூசைமேரி செயின்ட் ஜோசப் மெட்ரிக்குலேசன் பள்ளியினை நிர்வகித்து வந்தார். எங்களுக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர். எங்களின் திருமணத்திற்கு முன்பு எனது மனைவி சூசைமேரி அவர்களுக்கு அவரது தாயார் சவரியம்மாள்

**[Separate Sheet Enclosed]**

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. A. [signature] 1/3/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 1/3/2024
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
1/3/2024

Name: பெயர் R.CHANDRASEKAR
Rank: நிலை DSP/V&AC/Arl

**அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 01/2024 வழக்கு - முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

அவர்கள் பட்டணங்குறிச்சியில் உள்ள தனக்கு சொந்தமான அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் வட்டம் ஆண்டிமடம் கிராமம் புஞ்சை புல எண்.114/12-ல் உள்ள 2.52 ஏக்கர் நிலத்தினை கடந்த 25.01.1996-ஆம் தேதி ஆண்டிமடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு எண். 76/1996-ன்படி தானமாக எழுதி கொடுத்துள்ளார். மேற்படி நிலம் சூசைமேரி பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. எங்களது திருமணத்திற்கு பின்னர் நாங்கள் இருவரும் புதுச்சேரிக்கு குடிவந்தோம். அதன்பின்னர் நாங்கள் இருவரும் மேற்படி நிலத்தில் விவசாயம் செய்துவந்தோம். அதற்குரிய நிலவரியினையும் செலுத்தி வந்தோம். இந்நிலையில் எனது மனைவியின் சகோதரர் ஆரோக்கியசாமி மற்றும் சந்தனசாமி ஆகியோர் மேற்படி நிலத்தில் தங்களுக்கும் உரிமை உள்ளதாக ஜெயங்கொண்டம் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண்.340/2016-ன்படி வழக்கு தொடர்ந்தனர். பின்னர் எங்களது இடத்தின் கணினி சிட்டாவினை பார்த்த போது அதில் ஆரோக்கியசாமி மற்றும் சந்தனசாமி ஆகியோர்களின் பெயர்கள் கூட்டாக சேர்க்கப்பட்டிருந்தது தெரியவந்தது. இந்நிலையில் எனது மனைவி உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்தவர், கடந்த 23.08.2021-ஆம் தேதி இறந்துவிட்டார். பின்னர், எனது மனைவி சூசைமேரிக்கு எதிரான அசல் வழக்கு விசாரணைக்கு பிறகு கனம் உரிமையியல் நீதிமன்றத்தால் கடந்த 16.06.2023-ஆம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பு எங்களுக்கு சாதகமாக கிடைக்கப்பெற்றது. பின்னர் எனது மனைவிக்கு சொந்தமான மேற்படி நிலத்தினை வாரிசு அடிப்படையில் எனது பெயருக்கு பட்டாமாற்றம் செய்து வழங்க கோரியும், மோசடியாக சேர்க்கப்பட்டுள்ள ஆரோக்கியசாமி, சந்தனசாமி ஆகியோர்களின் பெயர்களை பட்டாவிலிருந்து நீக்கம் செய்ய கோரியும், கடந்த 02.12.2023-ஆம் தேதி அரியலூர் மாவட்ட ஆட்சியர், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர், CM Cell ஆகியோர்களுக்கு மனு அனுப்பினேன். அதன்பின்னர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து என் மனு மீது நடவடிக்கை மேற்கொண்டு அதன் விவரத்தினை மனுதாரருக்கு தெரிவிக்குமாறு ஆண்டிமடம் வட்டாட்சியர் அவர்களுக்கு உத்தரவிட்ட நகல் ஒன்றினை எனக்கு அனுப்பிவைத்திருந்தார்கள். பின்னர் நான் கடந்த 11.01.2024 அன்று ஆண்டிமடம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரில் சென்று அங்கு பணியில் இருந்த துணை வட்டாட்சியர் அவர்களிடம் எனது மனு சம்மந்தமாக விசாரித்தேன். அப்போது அவர் உங்களது மனு மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், ஆண்டிமடம் வருவாய் ஆய்வாளர் மூலமாக, ஆண்டிமடம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.மாரியம்மா அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், அவரை நேரில் சென்று சந்திக்குமாறும் கூறினார். பின்னர் நான் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.மாரியம்மா அவர்களை சந்திக்க சென்றேன். ஆனால் அவர் அலுவலகத்தில் இல்லை. அப்போது அலுவலகத்திலிருந்த ஒரு நபரிடம் விசாரித்தபோது அவர், தான் கிராம நிர்வாக அலுவலர் மாரியம்மாவின் கணவர் அருள் என்றும், தனது மனைவிக்கு உதவியாக பணி செய்து வருகிறேன் என்றும், உங்களுக்கு என்ன வேண்டும் என்றும் கேட்டார். நான் பட்டாமாற்றம் செய்ய மனு கொடுத்திருந்த விபரத்தை அவரிடம் சொன்னேன். அப்போது அவர், தன் மனைவியிடம் சொல்லி உங்கள் மனுமீது உரிய நடவடிக்கை எடுத்து, தவறுதலாக கூட்டுப்பட்டாவில் சேர்க்கப்பட்ட நபர்களின் பெயர்களை ரத்து செய்து தனிபட்டாவாக மாற்றித்தரச் சொல்கிறேன் என்றும், அதற்காக எங்களுக்கு 1,00,000/- ரூபாய் லஞ்சம் தர வேண்டும் என்றும், இல்லை என்றால் தனிபட்டா வழங்குவது கஷ்டமாகும் என்று கூறிவிட்டார். நானும் இலஞ்சம் தரமுடியாது என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் 25.01.2024 -ஆம்

தேதி ஆண்டிமடம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரில் சென்று துணை வட்டாட்சியரிடம், ஆண்டிமடம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.மாரியம்மா அவர்களுக்கு பதிலாக அவரது கணவர் திரு.அருள் என்பவர் கிராம நிர்வாக அலுவலர் பணியை செய்து வருவதாகவும், என்னுடைய மனுவினை பரிசீலித்து பட்டா வழங்க ரூ.1,00,000/- லஞ்சமாக கேட்ட விவரத்தினை புகாராக தெரிவித்தேன். அவர் என் எதிரிலேயே கிராம நிர்வாக அலுவலரின் கணவர் திரு.அருள் அவர்களை செல்போனில் தொடர்பு கொண்டு கண்டித்தார். பின்னர் துணை வட்டாட்சியரின் அறிவுரையின் பேரில் நான் கிராம நிர்வாக அலுவலர் மாரியம்மா அவர்களை சந்தித்து, எனது மனு சம்பந்தமாக கேட்டபோது, அவர் பட்டாமாற்றம் செய்து தருவதாக கூறினார். ஆனால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் என்னை அழைக்கழித்து வந்தார். அதன்பின்னர் கடந்த 08.02.2024-ம்தேதி மீண்டும் அவரை நேரில் சென்று சந்தித்தபோது, Online-ல் விண்ணப்பிக்குமாறு சொன்னார். அதன்பேரில் நான் அன்றைய தினமே எனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய விண்ணப்பித்தேன். அதற்கு ஆதாரமாக பத்திர நகல், என்மனைவி இறப்பு சான்று, வாரிசு சான்று, வில்லங்க சான்று ஆகியவற்றினை இணைத்திருந்தேன். பின்னர் 28.02.2024-ம்தேதி காலை சுமார் 11.00 மணியளவில் ஆண்டிமடம் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு சென்றபோது அலுவலகம் பூட்டப்பட்டிருந்தது. சிறிது நேரம் காத்திருந்த நான் அங்கு நின்றுகொண்டிருந்த ஒரு நபரிடம் விசாரித்தபோது, அவர் VAO கலக்டரேட் மீட்டிங்க்கு போயிருக்காங்க என்று கூறினார். பின்னர், நேற்று 29.02.2024-ஆம் தேதி காலை 11.00 மணியளவில் ஆண்டிமடம் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு நேரில் சென்றபோது திருமதி.மாரியம்மா அவர்களும், அவரது கணவர் அருள் என்பவரும் அலுவலகத்தில் இருந்தனர். நான் திருமதி.மாரியம்மா அவர்களிடம் எனது பட்டா மாற்றம் சம்மந்தமாக கேட்டேன். அப்போது அவர் என்னிடம் கூட்டுபட்டாவில் தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ள ஆரோக்கியசாமி மற்றும் சந்தனசாமி ஆகியோரின் பெயர்களை முதலில் நீக்க வேண்டும் என்றும், அதன்பின்னர்தான் உங்கள் பெயருக்கு மாற்றம் செய்யமுடியும் என்றும், கூட்டுபட்டாவிலிருந்து அவர்களது பெயர்களை நீக்கம் செய்ய மட்டும் பரிந்துரை செய்துள்ளேன் என்றும் சொன்னார். அதற்கு நான், மேடம் என்பேருக்கு பட்டா மாற்றம் செய்ய கேட்டுத்தானே இறப்பு சான்று, வாரிசு சான்று எல்லாத்தையும் கொடுத்திருந்தேன், நீங்க நேரடியா என்பேருக்கே மாத்திருக்கலாமே என்று கேட்டேன். அதற்கு அவர், நீங்கள் முதலில் பெயர் நீக்கம் செய்ய பரிந்துரை செய்ததற்கு ரூ.10,000/-ம் லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு பணம் கொடுத்தால்தான் சூசைமேரி பெயரிலிருந்து உங்களது பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய நடவடிக்கை எடுப்பேன் என்றும், இல்லை என்றால் இப்போதைக்கு உங்கள் பெயருக்கு பட்டா மாற்றம் செய்வதற்கு பரிந்துரை செய்ய மாட்டேன் என்றும் கூறினார். அதற்கு நான், என்னம்மா இவ்வளவு கேக்குறீங்க, ஏதாவது குறைச்சிக்க முடியுமா என்று அவரிடம் கேட்டேன். அப்போது, மாரியம்மாவின் கணவர் அருள் என்பவர் ஏற்கனவே உங்களிடம் ஒரு லட்சம் கேட்டிருந்தோம், நீங்க எதுக்கெடுத்தாலும் CM Cell, கலெக்ட்டர்னு மனு போட்டுக்கிட்டே இருக்கீங்க, அதனாலத்தான் உங்ககிட்ட ரூ.10,000/-ஆக குறைச்சி கேக்குறோம் என்று சென்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை என்றாலும், அப்போதைக்கு சரிங்க, பணத்த ரெடிபண்ணிக்கிட்டு வந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்து, ஆண்டிமடம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.மாரியம்மா மற்றும் அவரது கணவர் திரு.அருள் ஆகியோர் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.10,000/-ஐ ரெடிபண்ணிக்கொண்டு வந்துள்ளேன். என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட ஆண்டிமடம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.மாரியம்மா மற்றும் அவரது கணவர் திரு.அருள் ஆகியோர் மீது

தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, (sd.) (ஆங்கிலத்தில் ஒப்பம் தேதி 24.03.2023). **SUBMITTED** Sir, Received this computer typed written complaint from the complainant on 01.03.2024 at 08.00 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 01.03.2024 at 09.00 hrs in Ariyalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.01/2024, U/s 7 and 12 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018). (sd) R.Chandrasekar, Deputy Superintendent of Police, V&AC, Ariyalur.

1/3/2024
Deputy Superintendent of Police
Vigilance and Anti Corruption
Ariyalur

I am submitting the Original F.I.R. along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate, Ariyalur and the copies of the F.I.R to all other concerned Officials.

1/3/2024
Deputy Superintendent of Police
Vigilance and Anti Corruption
Ariyalur